DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***
IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous : SC No.130/2024
Deposition of Witness for : PW 2

| | |
|---|---|
| Name. | திரு. ராஜி |
| Father /Husband Name | |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 22.09.2025

**எதிரிகள் ஆஜர்.**

## முதல் விசாரணை

1) நான் மதுராந்தகம் வட்டம் மதுரா கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளைத் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

( அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2) எங்கள ஊரைச் சேர்ந்த எட்டியான் மகன் குமாரைத் தெரியும். அவர் என் வீட்டில் இருந்து 3 வது வீட்டில் வசித்து வருகிறார். கடந்த 19.10.2020 அன்று மாலை 5.30 மணி அளவில் நானும், குமார் என்பவரும் காளான் வாங்க புழுதிவாக்கம் சென்றோம் என்றால் அவ்வாறு அடிக்கடி செல்வோம். ஆனால் தேதி ஞாபகம் இல்லை. அன்றைய தினம் அட்சயா கல்லூரி வெளியே நின்று கொண்டிருந்தபொழுது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு கையில் வைத்திருந்த கேமராவால் போட்டோ எடுத்துக் கொண்டிருந்தனர் என்றால் எனக்கு தெரியாது. அப்பொழுது எதிரிகள் இருவரும் புழுதிவாக்கத்தில் இருந்து நெல்வாய் கூட்டுரோடு நோக்கி இருசக்கர

வாகனத்தில் வந்து ஆளுக்கொணரு வீச்சரிவாளுடன் ஓடிவந்து புகைப்படம் எடுத்துக் கொகாண்டிருந்த அந்த இருவரின் கழுத்தில் கத்தியை வைத்து அசிங்கமாக திட்டி அந்த கேமராவை பறித்துக் கொண்டனர் என்றால் எனக்கு தெரியாது. நானும், குமார் என்வரும் மற்றும் அங்கிருந்தவர்களும் சத்தம் போடவே அவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் ஓடிவிட்டனர் என்றால் சரியல்ல. அதன் பின்பு நான் அந்த பாதிக்கப்பட்ட நபர்களின் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.